**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் இரணியல்</u>**

**முன்னிலை :- திரு. S. ஜோதிகைலாஷ், B.A.,B.L., (கூ.மு.பொ)**

2026 ஆம் ஆண்டு **ஜுன்** மாதம் 09ஆம் நாள் **செவ்வாய்கிழமை**

**<u>இரணியல் காவல் நிலைய குற்ற எண் 144/2024</u>**

இல்

**<u>குற்றவியல் பல் வகை மனு எண்.372/2026 (Crl.M.P)</u>**

ஸ்டீபன் (வயது 54/2026) .................குற்றம் சுமத்தப்பட்ட நபர்

த/பெ. மரியநாயகம்

கதவு எண் 13/43A5, உடையார்விளை

குளச்சல் அஞ்சல்

/எதிர்/

அரசுக்காக காவல் ஆய்வாளர், ........எதிர்மனுதாரர் /குற்றமுறையீட்டாளர்

இரணியல் காவல் நிலையம் குற்ற எண் 144/2024

**இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவு 379ன் கீழ்**

இம்மனு **18.05.2026** ஆம் தேதியில் பினணை நிபந்தனையை தளர்வு செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு இன்று என் முன் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு இவ்வழக்கில் மனுதாரர் குற்றம் சுமத்தபட்ட நபர் தரப்பில் கற்றறிந்த **வழக்கறிஞர் திரு. S.ஏசுராஜா** அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்/ குற்றமுறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை I அவர்கள் ஆவணங்களை ஆராய்ந்தும், இன்று **09.06.2026** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.............

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் TN 70 R 6356 என்ற பதிவு எண் கொண்ட TATA 407 என்ற வாகனத்திற்கு இந்நிதீமன்றம் பிறப்பித்த நிபந்தனையை தளர்வு செய்ய கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர் / குற்றம் சுமத்தப்பட்ட நபர் தனது மனுவில் தனக்கு உரிமைப்பட்ட TN 70 R 6356 என்ற பதிவு எண் கொண்ட TATA 407 என்ற டெம்வில் அரசு அனுமதி பெறாமல் கனிமள சொத்தான கருங்கற்களை எடுத்துச் சென்றதாக இரணியல் காவல் நிலையத்தில் குற்ற எண் 144/2024 இ.த.ச 1860 பிரிவு 379ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வாகனத்தை இந்நீதிமன்றத்தில் வாகனத்தை திரும்ப பெற கேட்டு மனு தாக்கல் செய்து அந்த மனுவானது இந்நீதிமன்ற கு.ப.வ.ம.எண் 1666/2024

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.09 14:16:35 +0530

ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 19.08.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றதாக கூறியுள்ளார்.

மேலும், மேற்படி உத்தரவில் பிறப்பிக்கப்பட்ட படி மாதத்தின் முதல் வேலை நாளில் மேற்படி வாகனத்தை நீதிமன்றத்தில் காண்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்ததாகவும், அதன்படி 01.09.2024 ஆம் தேதி முதல் 04.05.2026 வரை 20 மாததங்கள் இந்நீதிமன்றத்தில் வாகனத்தை காண்பித்து வருவதாகவும், போலீஸ் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே மாதத்தின் முதல் வேலை நாளில் வாகனத்தை நீதிமன்றத்தில் காண்பிக்க வேண்டும் என்ற நிபந்தனை தளர்வு செய்ய வேண்டுமென்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

இம்மனு குறித்து எதிர்மனுதாரர் தரப்பு/ கற்றறிந்த அரசுத்தரப்பில் மேற்படி மனுதாரார் / குற்றம் சுமத்தப்பட்ட நபர் மேற்படி வாகனத்தை 01.12.2025 முதல் இந்நீதிமன்றத்தில் வாகனத்தை ஆஜர்படுத்தாமல் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர் நிபந்தனை மதிக்காமல், வாகனத்தை ஆஜபடுத்தாமல் இருந்து வருவதால், மேற்படி நிபந்தனை தளர்வு செய்ய ஆட்சேபனை தெரிவித்தார்.

மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் இந்நீதிமன்ற கு.ப.வ.ம.எண் 1666/2024ல் 19.08.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நிபந்தனையான மாதத்தின் முதல் வேலை நாளில் இந்நீதிமன்றத்தில் வாகனத்தை ஆஜர்படுத்துவேன் என்று ஒப்புக் கொண்டு வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். ஆனால் அரசுத் தரப்பில் மனுதாரர் 01.12.2025 ஆம் தேதியிலிருந்து சுமார் ஆறு மாதகாலமாக மனுதாரர் இந்நீதிமன்றத்தில் மாதத்தின் முதல் வேலை நாளில் வாகனத்தை ஆஜபடுத்தவில்லை என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் தரப்பில் ஏன் மாதத்தின் முதல் வேலை நாள் வாகனத்தை இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியாது என்பதற்கான விளக்கத்தினை மனுவிலோ, மனுதாரர் தரப்பிலோ கூறவில்லை.

இந்நிலையில், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர் 01.12.2025 ஆம் தேதி முதல் இந்நீதிமன்றத்தில் மேற்படி வாகனத்தை ஆஜர்படுத்தவில்லை என்று தெரியவருவதாலும், மனுதாரர் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை மதிக்காமல் செயல்பட்டு வருவதாலும், மேற்படி வாகனத்தினை ஏன் மாதத்தில் முதல் வேலைநாளில் ஒரு நாள் மட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியவில்லை என்பதற்கான உரிய விளக்கத்தில் தாக்கல் செய்யாததாலும், வழக்கின்

JOTHIKAILASH
SIVAMURUGAN

Digitally signed by
JOTHIKAILASH
SIVAMURUGAN
Date: 2026.06.09
14:16:43 +0530

தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு மேற்படி நபிந்தனையை தளர்வு செய்வதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்பதால் மனுதாரர் கோரிய TN 70 R 6356 TATA 407க்கான நிபந்தனையை தளர்வு செய்யக்கோரிய மனு **தள்ளுபடி செய்து** உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு **(09.06.2026)ம்** தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.09 14:16:49 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்(கூ.மு.பொ)

Judicial Magistrate
Eraniel

Court Seal

"The Parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date."